கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர், தேதி: 03.12.2025

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "உணவு மற்றும் இயற்கை தயாரிப்புகள் கண்காட்சி – 2025"

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் E-Yuva மையம், தாவர உயிரி தொழில்நுட்பத் துறை இணைந்து **"உணவு மற்றும் இயற்கை தயாரிப்புகள் கண்காட்சி – 2025"** எனும் நிகழ்வை **20 மற்றும் 21 டிசம்பர் 2025** அன்று நடத்த உள்ளது.

இக்கண்காட்சி உணவு மற்றும் இயற்கை தயாரிப்புகள் துறையில் நடைபெறும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், தயாரிப்புகள், சேவைகள் மற்றும் வாய்ப்புகளை ஒருங்கிணைந்த ஒரு தளத்தில் வெளிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொழில் முனைவோர், புதுமையாளர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், வேளாண் தொழில் தொடக்க நிறுவனங்கள், இயற்கை தயாரிப்பு மற்றும் பல்வேறு தொழில் பங்குதாரர்கள் இதில் பங்கேற்பர். நிறுவனங்கள், ஸ்டார்ட்அப்கள் மற்றும் தொழில் முனைவோர் தங்கள் புதுமையான தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியும், நெட்வொர்க்கிங் மற்றும் அறிவு பகிர்வு அமர்வுகளில் கலந்துகொண்டும் பயன் பெற அழைக்கப்படுகிறார்கள்.

சிறந்த இயற்கை உணவு சார்ந்த தயாரிப்புகளுக்கு பரிசு தொகை வழங்கப்பட உள்ளது.

**பரிசுகள்**

**பிரிவு – I : Food Innovation**

- முதல் பரிசு – ரூ. 10,000/–
- இரண்டாம் பரிசு – ரூ. 5,000/–
- மூன்றாம் பரிசு – ரூ. 2,000/–

**பிரிவு – II : Idea Pitching**

- முதல் பரிசு – ரூ. 5,000/–
- இரண்டாம் பரிசு – ரூ. 2,000/–
- மூன்றாம் பரிசு – ரூ. 1,000/–

**பொதுமக்கள் பதிவு முற்றிலும் இலவசம்** என்பதால், அனைவரும் கலந்து கொள்ளலாம்.
குறைந்த எண்ணிக்கையிலான காட்சிக்கு ஸ்டால்கள் மட்டுமே உள்ளன.
**மேலும் தொடர்புக்கு:** உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம், TNAU 8056506214; 8870281435

**மக்கள் தொடர்பு அலுவலர்**